மீன் எண்ணெய்.

***121 வினு—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஷார்க்லிவர் ஆயில் எங்கெங்கே தயார் செய்யப்படுகிறது ?

(இ) இதுபோன்ற ஆயில் என்னென்ன மீன்களிலிருந்து தயாரிக்கப் படுகின்றது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) செப்பனிடப்படாத சுரு மீன் எண்ணெய் கீழ்க்கண்ட இடங்களில் தயாரிக்கப்படுகிறது :—

1. தேவனும்பட்டினம்.
2. ஆர்க்காட்டுத்துறை.
3. அதிராமப்பட்டினம்.
4. மல்லிப்பட்டினம்.
5. சேதுபாவாச்சத்திரம்.
6. அம்மாப்பட்டினம்.
7. பாம்பன்.
8. தூத்துக்குடி.
9. பின்னகாயல்.
10. ஓவரை.
11. இடிந்தகரை.

(இ) சுரு மீன்களிலிருந்து மாத்திரம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இதை மேலும் அதிகப்படுத்து வதன் மூலமாக, ஆஸ்பத்திரிகளில் உள்ள ஏழைக் குழந்தைகளுக்கு இன்னும் அதிகப்படியாகக் கொடுத்து உதவுவதற்குப் பேருதவியாக இருக் கும். ஆகவே, அதை அதிகப்படுத்த உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நமது மாநிலத்தில் நான் மேலே குறிப்பிட்ட இடங்களில் தயாரிக்கப்படுகிற மீன் எண்ணெய் கனம் அங்கத்தினர் கருதுவது போல — ஆஸ்பத்திரியில் இருக்கும் குழந்தை களுக்கும் மற்றவர்களுக்கும் வழங்குவதாக இல்லை. இங்கே தயாரிப்பது பதனிடப்படாதது. இந்த எண்ணெயை நாம் கேரளாவிற்கு அனுப்பி வைக்கிறோம். நாம் கேரளாவிற்கு அனுப்பி வைக்கும் எண்ணெயை, கேரளா ஸ்டேட்டில் கள்ளிக்கோட்டையில் சுத்தம் செய்து அங்கிருந்து விற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுரு மீன் எண்ணெயை ஒட்டிய இந்த வினுவைப்பற்றித் திரு. வேழவேந்தன் அவர்கள் ஒரு துணை வினு கேட்பார்கள்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, சுரு மீன் எண் ணெய் தயாரிப்பதற்கு வேண்டிய சுரு மீன்களைப் பிடிப்பதற்கு "டெரி டோரியல் வாட்டர்ஸ்"ஸைக் கடந்து பிடிக்க வேண்டுமானால், அதற்கு மத்திய அரசாங்கத்தினுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்று விதிமுறை இருக்கிறதா ? ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டத்திற்கு மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்கு அனுமதி வழங்கியிருக் கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சுரு மீனைத் தனியாகப் பிடிப்பதில்லை. நம் மாநிலத்தில் நான் ஏற்கெனவே குறிப்பிட்ட 11 இடங்களில்தான் கிடைக்கின்றன. சுரு மீனைத் தனியாகப் பிடிக்காமல், மற்ற மீன்களோடு சேர்ந்து பிடிக்கிருர்கள். அவற்றிலிருந்து சுரு மீனைத் தனித்தெடுத்து இந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது.

Mr. SPEAKER : Regarding this question relating to shark liver oil, the hon. Member Thiru Martin will ask a supplementary question.

Thiru T. MARTIN : May I request the Hon. Minister to state whether there is any proposal to extend these activities to very good fishing centres like Periathalai and Manapad in Tirunelveli District ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அம்மாதிரி யோசனை இப்பொழுது இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கருத்து தெரிவிப்பாராஞல், அது கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கு போதுமான மீன் கிடைக்கு மாஞல் அந்தத் திட்டத்தை அங்கே கொண்டுவருவதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, இந்த மீன் எண்ணெயைக் குடிப்பதற்கு நாற்றம் ஏற்படுகிறது. வெளிநாடுகளில் இதை மாத்
மூற் பகல் 10-00 திரையாகச் செய்து விடுகிருர்கள். ஆகவே, அதுபோலவே நாற்றத்தைப் போக்கி, மாத்திரைகளாகச் செய்து தருகிற ஏற்பாடு இருக்கிறதா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இங்கே மீன் எண்ணெய் தயாரிக்கப்படுவதில்லை. செப்பனிடப்படாத மீன் எண்ணெய்தான் குறிப்பிட்ட அளவுதான் தயாரிக்கப்படுகிறது. அதுவும் கேரளப் பகுதிகளில்தான் அந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. ஆகவே, அங்கு வேண்டுமாஞல் உங்கள் திட்டத்தை அவர்கள் அமல்படுத்திப் பார்ப்பார்கள். போதுமான மீன்கள் கிடைக்காத காரணத்தால் நாம் மீன் எண்ணெய் தயாரிப்பதில்லை.

தானியங்களை எடைபோட இயந்திரங்கள்.

***122 வின—திரு. க. இராமமூர்த்தி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயது செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள ஒழுங்குப்படுத்தப்பட்ட விற்பனைக் கூடங்களில் (Regulated Market Committees) விவசாயிகளின் தானியங்களை எடை போட இயந்திரங்கள் (Weighing Machines) வழங்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

திரு. க. இராமமூர்த்தி : தென் ஆற்காடு மாவட்டத்திலே குறிப்பாக திண்டிவனத்திலே வியாபாரிகள் பண்டங்களை எடைபோடும்போது, எடையில் ஏமாற்றுகள் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? இதனைப் போக்க எடைபோடும் இயந்திரங்கள் மார்க்கெட் கமிட்டிகளில் வைக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் கேட்ட கேள்வி தவருனது. ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியிலும் எடை போடுகின்ற மெசின் வைக்கப்பட்டிருக்கிறது. 1950-ம் வருடத்திய சென்னை மார்க்கெட் கமிட்டி சட்டத்தின்கீழ் ஒவ்வொரு மார்க்கெட் கமிட்டியும் ஒரு "வேயிங் மெஷினை"யும் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கனம் உறுப்பினர் மார்க்கெட் கமிட்டிக்குப் போகாமலே இந்தத் தகவலைக் கேட்கிருர்கள்.